பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 27 | திங்கட்கிழமை | 13.11.2023 | கதிர் 367

# வரவு - செலவுத் திட்டம் இன்று நாடாளுமன்றில்

## அரச ஊழியர்கள் சம்பள அதிகரிப்புக்கு வாய்ப்பு

2024ஆம்ஆண்டுக்கானவரவு-செலவு திட்டம் இன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க வரவு செலவுத் திட்ட உரையை நண்பகல்12மணிக்குஆற்றுவார்.இதில் அரசஊழியர்களுக்கு10ஆயிரம்ரூபாய் வரையான சம்பள அதிகரிப்புக்கான உறுதிமொழி வழங்கப்படும் என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிதி அமைச்சைபொறுப்பேற்றதன்பின்னர் சமர்ப்பிக்கும் இரண்டாவது வரவு செலவு திட்டம் இதுவாகும்.

வரவு-செலவுத்திட்டவிவாதம்நவம்வர் 14செவ்வாய்க்கிழமை முதல் நவம்வர் 21 வரை ஞாயிறு தினங்கள் தவிர்ந்த வாரத்தின் 7 நாட்களும் இடம்பெறும். அடுத்து,வரவுசெலவுத்திட்டஇரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு ☞2

## இது ரகசியம் அல்ல!

கடந்த சில நாட்களாக, ஜனாதிபதி ரணிலுக்கும் விளையாட்டுத்துறை அமைச்சர்ரொஷான்ரணசிங்கவுக்கும் இடையில் ஒரு அக்கப்போர் நடந்துகொண்டிருக்கின்றது. ஊழல் குற்றச்சாட்டின் பேரில் இலங்கை கிரிக்கெட் சபையினை அமைச்சர் ரொஷான் கலைத்தார். ஆனால், அதற்கெதிராக நீதிமன்றம் சென்ற கிரிக்கெட் சபை இடைக்காலத் தடை உத்தரவைப் பெற்றது. அதனை எதிர்த்து இன்று மேன்முறையீடு செய்கிறார் அமைச்சர்.

இந்த நிலையில், "ரொஷான் ஏன் ரணிலை எதிர்க்கிறார்...?"

கோட்டாபயவின்அமைச்சரவையை ரணில் மாற்றாமல்விட்டது அதிலிருந்த அமைச்சர்கள் மீதுள்ள அன்பினால் அல்ல, அவர்கள் எந்த விடயத்திற்கும் ஆதரவாகக் கையை உயர்த்தக்கூடியவர்கள் என்பதால்தான். "ஆமாம்சாமி" ☞2

## திருமலையில் சிறிய நில அதிர்வு

திருகோணமலை - மொரவெள பிரதேசத்தில் சிறிய அளவிலான நில அதிர்வு பதிவாகியுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த பணியகத்தின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்று பிற்பகல் 1.15 க்கு இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது. குறித்த நில அதிர்வு 3.4 மெக்னிடியுட் ☞8

## குறுகிய கால நெருக்கடிகளுக்குத் தீர்வு பொருளாதார மீட்சிக்கும் வழி வகுக்கும்

### இன்றைய வரவு செலவுத் திட்டம் தொடர்பில் அமைச்சர் கருத்து

குறுகிய கால நெருக்கடிகளுக்குத் தீர்வை வழங்கும் அதேநரம், பொருளாதர ரீதியாக இலங்கையை மீட்டெடுக்கும் வகையில் அடுத்த ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டம் அமையும் என்று நிதிய இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இறுதிக்கட்டத் தயாரிப்பு மற்றும் சமர்ப்பிப்பு தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

அந்தக் கலந்துரையாடலில், நிதி இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித்சியம்பலாபிட்டிய, ஷெஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின்செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கானஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க,ஜனாதிபதியின் ஆலோசகர்சமன் அதாவுதஹெட்டி,நிதிஅமைச்சின் செயலாளர் மஹிந்த சிரிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் மதுஷங்க திசாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத்தெரிவித்தார்.அவர் மேலும்தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டிற்கானதலைமைத்துவத்தினைப் பெற்றுக் கொண்டபோது குறுகிய நோக்கங்களுக்காகதான் செயற்படப்போவதில்லை என்று கூறினார்.

விசேடமாக, ☞8

## தனியார்துறை ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்புத் தரவேண்டும்

### ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் வலியுறுத்து

தனியார் துறை ஊழியர்கள்மற்றும்ஓய்வூதியர்களின் சம்பளமும் இன்றையவரவுசெலவுத் திட்டம் அதிகாரிக்கப்பட வேண்டும்என்றுஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிபாளர்நாயகம்சமன் ரத்னப்பிரியதெரிவித்தார்

கொழும்பில்நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் 15 இலட்சம் அரச பணியாளர்கள் உள்ளனர். அதனை விடவும், 65 இலட்சம் தனியார் ஊழியர்கள் உள்ளனர்.அவர்கள் ☞2

## மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு வரவு செலவு திட்டத்தில் தீர்வு வேண்டும்

### பொது அமைப்புக்கள் வலியுறுத்து

மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கான தீர்வினை வரவு, செலவுத் திட்டம் வழங்க வேண்டுமென பலதரப்பட்டதரப்பினரும் வலியுறுத்தியுள்ளனர்.

அந்த வகையில், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்ததாவது: தற்போதைய ஆட்சியில் வரவு, செலவுத்திட்டத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்னதாகவே அனைத்து துன்பங்களையும் ☞8

## நாட்டின் வருவாயை அதிகரிக்க வெரிட்டே ரிசேர்ச் முன்மொழிவு

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இன்றையதினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக, வெரிட்டே ரிசேர்ச் என்ற ஆய்வு நிறுவனம் இலங்கையின் வருவாயை அதிகரிப்பதற்கும் வளர்ச்சிக்கு புத்துயிர் அளிப்பதையும் நோக்கமாகக் வடிவமைக்கப்பட்ட10 வரவு,செலவுத் திட்டமுன்மொழிவுகளை வெளியிட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் வருவாயைஅதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட ஐந்து முன்மொழிவுகள் முன்வைக்கப் பட்டுள்ளனன. அவை யாவன: ☞2

## குளவிகள் கொட்டியதில் தாயும் மகனும் இறப்பு

நுவரெலியா மாவட்டத்திற்குட்பட்ட ஹேவாஹெட்ட பிரதேசத்தில் குளவிகள் தாக்குதலுக்குள்ளான தாயும் மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

தமது வீட்டுக்கு அருகில்குறித்தஇருவரும் நேற்றுகுளவிகொட்டுக்கு இலக்காகியுள்ளதாக பொலிஸார் ☞9

## டிஜிட்டல் பொருளாதாரத்தால் 15 பில். டொலர் வருமானம்

### 2030இல் அடைய ரணில் யோசனைகளை முன்வைப்பார்

2030 ஆம் ஆண்டாகும் போது டிஜிட்டல்பொருளாதாரத்தின் ஊடாக 15 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை அடையும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் டிஜிகொன் பொருளாதார யோசனையை நடைமுறைப் படுத்துவதற்கு தேவையான முன்மொழிவுகளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்வைப்பாரென இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவன பிரதி பிரதம டிஜிட்டல் பொருளாதார அதிகாரி சச்சிந்ர சமரரத்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட 'ஒன் ஓவன் உரை' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ☞2

## ரணில் தலைமையில் நேற்று அரச தீபாவளி கொண்டாட்டம்

### ஜனாதிபதி செயலகத்தில் நடந்தது

உலகெங்கிலும் உள்ள இந்துக்களால் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று ரணில் விக்ரமசிங்க தலைமையில் விசேட தீபாவளி கொண்டாட்ட நிகழ்வு இடம்பெற்றது.

ஜனாதிபதி அலுவலகத் தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கொண்டாட்டம் இந்து சம்பிரதாயங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டுமிகவும்எளிமையாகவும்நேர்த்தியாகவும் நடைபெற்றது.

இந்நிகழ்வில்கலந்து கொண்ட ஜனாதிபதிக்கு இந்து சமய கலாசார முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நிகழ்வில் கலந்துகொண்ட இந்துக்களுக்கு தீபாவளி ☞8

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் அடுத்த ஆண்டு நாடாளுமன்றில்

### நீதி அமைச்சர் விஜயதாச தெரிவிப்பு

2024 முற்பகுதியில் பயங்கரவாத எதிர்ப் புச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜாபக் ஷ தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப் புச் சட்டமூலத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதேஅவர் இதனைத் தெரிவித்தார்.

ஆட்சியாளர்கள் ஏற்கனவே அறிமுகப் படுத்திய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்திற்கு நாட்டிற்குள்ளும் வெளியிலும் கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

பயங்கரவாதஎதிர்ப்பு சட்டமூலம்சம்பந்தமாக சிவில் மற்றும் இதர தரப்புக்களுடன் கலந்துரையாடும் ☞2

## நெருக்கடி ஆபத்தில் தொடர்ந்தும் இலங்கை

தெற்காசியநாடுகளில் பாக்கிஸ்தான் மற்றும் இலங்கை ஆகியவை இருப்புச்சமநிலைநெருக்கடிகளால் மிகவும் பாதிக்கப்படக்கூடியநாடுகளாகஅடையாளப்படுத்தப் பட்டுள்ளதாக மூடிஸ் முதலீட்டுச் சேவை சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், குறைந்த அளவிலான ஏற்றுமதி வருமானம் மற்றும் அந்நியச் செலவணி வருமானமின்மை, அந்நிய முதலீடு இல்லாமை ஆகிய காரணங்களால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அச்சேவை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியா தனது, ngu-k; மற்றும் பன்முகப் படுத்தப்பட்ட ஏற்றுமதித் துறையின் காரணமாக நெருக்கடிகளுக்கு மிகக் குறைவான ☞8

## இனி இது .....

போடும் அமைச்சரவை. 2002 அல்லது 2015இல் கூட ஐ.தே.க. ஆட்சியில் ரணிலிடம் இப்படியான அமைச்சர்கள் இருந்ததில்லை. இந்த அமைச்சரவையில் உள்ளவர்கள் ரணில் சொல்வதை எதிர்த்ததில்லை. ஆனால் அதிலுள்ள அமைச்சர் ஒருவர் ரணிலைத் தவறாகப் புரிந்துகொண்டார். அவர் ரொஷான் ரணசிங்க. காரணம், முன்னாள் அரசாங்கத்தினாலோ அல்லது எதிர்க்கட்சிகளினாலோ தாக்கப்படாத இலங்கையின் மிகவும் சக்திவாய்ந்த ஜனாதிபதியையே அவமானப்படுத்தியவர் ரொஷான் என்பதை ரணில் மறந்துவிட்டமைதான்.

ஏனைய அனைத்து அமைச்சுக்களையும் ரணில் விரும்பியவாறு தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால், விளையாட்டுத்துறை அமைச்சையும் தாம் விரும்பியவாறு கட்டுப்படுத்த ஆரம்பித்தார். விளையாட்டுத்துறை அமைச்சு முன்னர் ராஜபக்ச குடும்பத்தின் பட்டத்து இளவரசர் நாமல் ராஜபக்ச வசம் இருந்தது. நாமலின் பணிகளில் கோட்டாபய தலையிடவில்லை. மகிந்த ராஜபக்ச ஒரு விரலைக்கூட குத்தவில்லை. விளையாட்டு அமைச்சின் கிரீடம் நாமலின் கிரீடம். அரகலய போராட்டம் காரணமாக நாமல் விலகிய பின்னர் கோட்டா ரொஷானை விளையாட்டுத்துறை அமைச்சராக நியமித்தபோது, ரொஷானை விரும்பியபடி ஆட வைக்கலாம் என்று நாமல் நினைத்தார். ஆனால் அதற்கு ரொஷான் இணங்கவில்லை. முன்னர், ரொஷான் நாமலின் நலன் விரும்பி, விளையாட்டுத்துறை அமைச்சரான பின்னர், ரொஷான் விரும்பியதைச் செய்யவில்லை, காரணம் நாமல், தற்போது விரும்பியதைச் செய்ய முயன்றபோதும் அதற்கு ரணிலை அனுமதிக்கவில்லை.

ரணில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலரை வளைத்துப்போட்டு சஜித் பிரேமதாசவை அநாதரவாக்கினார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியபோது, நீதிமன்றத்தின் வாயையும் ரணில் அடைத்தார். இவற்றாலல் ரணில் சர்வ வல்லமை படைத்தவர் என்றே அனைவரும் நினைத்தனர். ஆனால் ரணிலின் காது வழியாக பதுங்கியிருந்து இடைக்கால கிரிக்கெட் கமிட்டியை நியமித்த ரொஷான், தான் ரணிலின் காலில் விழுந்த தூசி அல்ல என்பதை உலகுக்கு காட்டினார். முதுகெலும்பில்லாத 'ஆமா சார்' அமைச்சர்களின் கண்களைத் திறந்தார்.

சமகி ஜன பலவேகயவுடனான ரணிலின் ஆட்டங்களில் இருந்து தப்பி முதுகை நிமிர்த்திக்கொண்டார். இதுதான் பிரச்சினை. கிரிக்கெட் சபை ரணிலின் ஆசீர்வாதத்துடன்தான் இயங்குகின்றது.

தனது பிடியைத் தக்க வைக்க எந்த எல்லைக்கும் ரணில் செல்வார் என்பது மற்றொரு தடவை நியமிக்கப்பட்டிருக்கின்றது. ஏனெனில் கிரிக்கெட் சபையின் தலைவரும் நாமலும் சேர்ந்துதான் இலங்கைக் கிரிக்கெட்டை தடை செய்யுமாறு சர்வதேச கிரிக்கெட் சபையிடம் கேட்டார்கள் என்ற சொல்லப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வரவு - ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நவம்வர் 21 மாலை 6.00 மணிக்கு இடம்பெறும்.

அதனையடுத்து, குழுநிலை விவாதம் நவம்பர் 22 முதல் டிசெம்பர் 13 வரை ஞாயிறு தினங்கள் தவிர்ந்து வாரத்தின் 7 நாட்களிலுமாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளது.

அதற்கமைய, 2024 நியதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்ட மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசெம்பர் 13 புதன் கிழமை மாலை 6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

முன்னதாக கடந்த வியாழக்கிழமை 2024 நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்தவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்பிரகாரம், 2024 நிதியாண்டுக்கான அரச ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின்படி, அரச மதிப்பிடப்பட்ட செலவு 3,860 பில்லியன் ரூபாவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 2023 அரச ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின்படி செலவினம் 3,657 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டிருந்தது. இம்முறை, உத்தேச செலவு மதிப்பீடு 203 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது

இதேவேளை, சமர்ப்பிக்கப்பட்ட 2024 வரவு செலவுத் திட்டத்திற்கான 3 இலட்சத்து 86,084 கோடியே 6,788,000 ரூபாய் ஒதுக்கீட்டில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்காக மொத்தமாக 56,445 கோடியே 8,500,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

2024 நிதி ஒதுக்கீடுகளில், பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு 88,611 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், இதில் வடக்கு மாகாணத்திற்கு 451 கோடி ரூபாயும் கிழக்கு மாகாணத்திற்கு 522 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகளுக்காக அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் செயற்பாடுகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது அந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு, அவர்களின் அபிப்பிராயங்கள் மற்றும் முன்மொழிவுகள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டே வரைவு இறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், அடுத்து வரும் ஆண்டின் முற்பகுதியில் சட்டமூலத்தினைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். மேலும், வரவு, செலவுத்திட்டத்திற்கான விவாதங்கள் தொடங்கப்படவுள்ளதன் காரணமாக இந்தக் காலப்பகுதியில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தைச் சமர்ப்பிப்பது தாமதமாகின்றது - என்றார்.

## தனியார்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரும் வாழ்க்கையைக் முன்கொண்டு செல்வதற்கு சிரமப்படுகின்ற நிலையில் தான் சம்பள அதிகரிப்பினைக் கோரியுள்ளனர்.

அரச ஊழியர்களின் சம்பளத்துக்காக மாதமொன்றுக்கு 80 பில்லியன் ரூபாய் தேவைப்படுகின்றது. தற்போதைய 20 ஆயிரம் ரூபா கோரிக்கைக்கு அமைவாக அதிகரிப்புச் செய்தால் மேலும் 30 பில்லியன் ரூபாய் தேவைப்படுகின்றது.

வரவு, செலவுத் திட்டத்தில் 30 பில்லியனை ஒதுக்கீடு செய்வதென்பது அவ்வளவு இலகுவான விடயமல்ல. அதேநேரம், அரச ஊழியர்களுக்கு மாத்திரம் சம்பள அதிகரிப்பை மேற்கொள்வது முறையல்ல. அரச, தனியார் ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பைச் செய்ய வேண்டும். ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கு அதற்கான தொகை அதிகரிக்கப்பட வேண்டும். அவர்கள் வாழ்வது கடினமான விடயமாக உள்ளது. ஆகக்குறைந்தது பத்தாயிரம் ரூபாவையாவது அவர்களுக்கு அதிகரிக்கவேண்டும்.

அதற்கான கோரிக்கையை நான் அரசாங்கத்திடமும், ஜனாதிபதியிடத்திலும் முன்வைத்துள்ளோம். அதற்கு அமைவாக அரசாங்கமும், ஜனாதிபதியும் இணைந்து நியாயமான அதிகரிப்பை முன்மொழிவார்கள் என்று நினைக்கின்றேன் என்றார்

## டிஜிட்டல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும் போதே இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவன பிரதி பிரதம டிஜிட்டல் பொருளாதார அதிகாரி சச்சிந்ர சமரரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னர் ஈ- இலங்கை பற்றி பேசப்பட்டது. தற்பொழுது டிஜிட்டல் எனும் விடயம் முன்னுக்கு வந்துள்ளது. டிஜிட்டல் என்ற விடயம் ஸ்மார்ட் போனில் வந்துவிட்டது. கொடுக்கல் வாங்கல் தொடர்பான விடயங்கள் இன்று டிஜிட்டல் மயமாக்கப்பட்டுவிட்டன. இந்த பெரிய மாற்றம் இணையத்தின் மூலம் ஏற்பட்டது.

இந்த ஆண்டு, ஜனாதிபதியின் ஆலோசனையின்பேரில், டிஜிகொன் பொருளாதார எண்ணக் கரு முன்வைக்கப்பட்டுள்ளது. இது 2030க்கான வெற்றிகரமான திட்டமாகும். டிஜிட்டல் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கிறது. அரச மற்றும் தனியார் துறைகளை ஒன்றிணைத்து டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான முதல்படி தற்போது எடுக்கப்பட்டுள்ளது. தற்போதைய பொருளாதார முன்னேற்றத்திற்கு டிஜிட்டல் மயமாக்கலின் பங்களிப்பை 20 சதவீதம் வரை அதிகரிக்க முடியும். பொருளாதாரத்தை பெருமளவில் மேம்படுத்த முடியும். டிஜிட்டல் பொருளாதாரக் கொள்கையை உருவாக்குவதில் இலங்கையில் பலர் பங்களித்துள்ளனர்.

இந்தத் திட்டம் அரச மற்றும் தனியார் துறைகள் மற்றும் உலக வங்கியின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படுகிறது. தொழில்நுட்ப அமைச்சின் இணையத்தளத்தின் ஊடாக இது பற்றிய தெளிவைப் பெறலாம். டிஜிட்டல் பொருளாதாரம் புதிய தலைமுறைக்கு பெரும் பங்கை அளித்துள்ளது. டிஜிட்டல் பொருளாதாரத்தில் இருந்து யாரும் விலக முடியாது.

அரச ஆதரவைப் பெற்றுள்ளதால், இந்தத் திட்டத்தை நீண்டகாலத்திற்குச் செயல்படுத்த முடியும். அதன்போது முதலீடுகள் அதிக அளவில் வரலாம். சர்வதேச முதலீட்டாளர்கள் நாட்டின் டிஜிட்டல் மயமாக்கலின் அடிப்படையில் தங்கள் முதலீடுகளுக்கு நாடுகளைத் தெரிவு செய்கிறார்கள்.

டிஜிட்டல் பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்கு அரசின் ஆதரவை வழங்குவது மிகவும் முக்கியம். இதற்காக நிறுவனமொன்றை ஏற்படுத்தினால் நல்லது. டிஜிகொன் யோசனையை ஜனாதிபதி தான் முன்வைத்தார். அரச மற்றும் தனியார் துறைகள் ஒன்றிணைந்து செயற்படுமாறு ஜனாதிபதியே பரிந்துரைத்தார்.

இந்த அனைத்து துறைகளையும் ஒன்றிணைத்து நாட்டின் பொருளாதாரத்தை உயர் மட்டத்திற்கு உயர்த்த ஜனாதிபதி செயற்பட்டு வருகின்றார். மக்களின் மனோபாவத்தை மாற்றி இதற்கு பங்களித்தால், பொருளாதாரத்தை விரைவாக மேம்படுத்தலாம். சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்தன. அந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தைப் புரிந்துகொண்டு நமக்கு உகந்த அடிப்படையில் நிறுவனமொன்றை நிறுவுவது முக்கியம்.

மற்ற நாடுகள் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் டிஜிட்டல் பொருளாதாரத்தில் பெரும் பங்களிப்பை அளித்துள்ளன. ஏற்றுமதி துறையை மேம்படுத்த, டிஜிட்டல் பொருளாதாரத்தில் முதலீடு செய்வது அவசியம். தகவல் தொழில்நுட்ப நிறுவனமாக, கடந்த 10 ஆண்டுகளாக உலக வங்கியுடன் நாங்கள் செயற்பட்டு வருகிறோம். இலங்கையின் தகவல் தொழில்நுட்பத் துறையில் விரைவான வளர்ச்சி ஏற்பட்டது. டிஜிட்டல் பொருளாதாரக் கொள்கையை செயல்படுத்த ஒரு நிறுவன கட்டமைப்பு மற்றும் பட்ஜெட் ஊடான ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது.

தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.3 சதவீதமாக டிஜிட்டல் பொருளாதாரத்திற்காக செலவிடப்படுகிறது. இதை 20 சதவீதமாக உயர்த்துவதன் மூலம் டிஜிட்டல் பொருளாதாரத்தை வலுவாக முன்னெடுத்துச் செல்ல முடியும். டிஜிட்டல் மயமாக்கலின் மூலம் பொதுச் சேவை எப்படி மாறும், மக்களின் வாழ்க்கை எப்படி மாறும் என்பதை பார்க்க முடிகிறது. 2030ஆம் ஆண்டுக்குள் டிஜிட்டல் பொருளாதாரத்தின் ஊடாக இலங்கைக்கு 15 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்கில், டிஜிகொன் பொருளாதார யோசனையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான முன்மொழிவுகளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த வருட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் முன்வைக்கப்படவுள்ளது என்றார்.

## நாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடித்துவைத்தல் வரி விகிதங்களை தற்போதுள்ள 5% இலிருந்து 10% ஆக உயர்த்துதல். - இம் முன்மொழிவினூடாக மேலதிமாக 90 பில்லியன் ரூபாவை ஈட்டலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிகரெட் வரிகளை அட்டவணைப் படுத்துவதற்காக வெளியிடப்பட்ட பகுத்தறிவு சூத்திரத்தை ஏற்றுக் கொள்ளல். இம் முன்மொழிவு 35 பில்லியனுக்கும் அதிகமான தொகையைச் சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது .

சீனி வரி குறைப்பை இரத்து செய்து, வரி மாற்றங்களைச் செய்வதில் நிர்வாக அதிகாரத்தை நீக்குதல்-சிறப்புபண்டங்களுக்கான வரிச்சட்டத்தின் மூலம் அமைச்சருக்கு கொடுக்கப்பட்ட நிர்வாக அதிகாரத்தின் அளவு, பொதுவாக 'சீனி ஊழல்' என்று அழைக்கப்படுவதற்கு வழிவகுத்தது, உடனடியாக அதைச் சரிசெய்தால் (இப்போது நடந்தது போல) 25 பில்லியனுக்கும் அதிகமான தொகையை ஈட்ட முடியும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் சர்வதேச ரீதியாக சுட்டெண்ணப்பட்ட சூத்திரத்திற்கு மேலாக அதிகரித்த விலையை அமுல்படுத்துவதற்குப் பதிலாக, முழு தொழிற்துறையின் மீதும் அதிகரிக்கப்பட்ட வரியின் ஊடாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் ஏற்படும் அதிகப்படியான செலவினங்களை மீளப்பெறுதல். - இந்த முன்மொழிவு போட்டி தயாரிப்புகளிலிருந்து வசூலிக்கப்படும் மேலதிக வரிகள் மூலம் சுமார் 25 பில்லியன் ரூபாயை ஈட்டிக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சொத்து வரிகளை மதிப்பிடுவதற்கும் வசூலிப்பதற்கும் விவரிக்கப்பட்ட முறையை அமுல்படுத்துதல் - இந்த முன்மொழிவு தொடக்கத்தில் வரி வசூலை குறைந்தபட்சம் 17 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கும்.

அதேவேளை, கருத்தரங்கில் பொருளாதாரத்திற்கு புத்துயிரூட்டுவதை நோக்கமாகக் கொண்ட ஐந்து முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. அவையாவன.

*அரசு நிதியுதவியுடன் மகப்பேறு விடுப்பு சலுகைகளை அறிமுகப்படுத்துதல். - தற்போது மகப்பேறு சலுகைகளின் முழு செலவையும் தனியார் துறை ஏற்கிறது, இதனால் பெண்களை வேலைக்கு அமர்த்துவது விலை உயர்ந்த விடயமாகவே உள்ளது. அரசு நிதியுதவியுடன் கூடிய மகப்பேறு விடுப்பு வசதியூடாக ஆட்சேர்ப்பில் உள்ள பாகுபாட்டைக் குறைத்து பெண் தொழிலாளர் பங்கேற்பை அதிகரிக்கக்கூடும் என்று ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

*பணப்பரிமாற்றம் மற்றும் அரச மானியங்களைச் சீர்திருத்தம் செய்வதன் மூலம் ஏழைகளைப் பாதுகாத்தல். - சிறந்த இலக்குடன் கூடிய பணப்பரிமாற்றங்கள் பாதிக்கப்படக் கூடியவர்களைக் காத்து, மானியங்களின் ஒதுக்கீட்டை மிகவும் திறமையாகவும், பயனுள்ளதாகவும் ஆக்குகின்றது.

*இலங்கை தனது வர்த்தக நடவடிக்கைகளில் 69 சதவிதம் வெளி உதவியை நாடியுள்ளது, இது குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் காணப்பட்ட சராசரியான 40 சதவீதம் உடன் ஒப்பிடும் போது கணிசமான உயர் வீதமாகும். முன்முயற்சியுடன் செயல்படுத்துவதை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகள் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன.

*வர்த்த கமுத்திரை பதிவு குறித்த மாட்ரிட் நெறிமுறையை ஏற்றுக்கொள்வது. - இது சர்வதேச வர்த்தக முத்திரைகள் பதிவின் வேகத்தையும் எளிமையையும் அதிகரிக்கும் என்பதால், ஏற்றுமதியாளர்களுக்கு அதிக பெறுமதி மற்றும் உயர் விளிம்புடைய தயாரிப்புகளுடன் உலகளவில் செல்வதற்கு மிகவும் தேவையான ஊக்கத்தை வழங்குகிறது.

*வங்கித் துறையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள். வங்கித்துறை அபாயங்களை நிவர்த்தி செய்ய வைப்பு உத்தரவாத வரம்பை உயர்த்துதல், வங்கி தோல்விகளின் போது பணப்புழக்கத்திற்கான நிதி

தொடர்ச்சி 8ம் பக்கம்...



# ஜனநாயகத்தைப் பாதுகாக்க தவறினால் இளைஞர்கள் வன்முறைக்கு செல்வார்கள்

## இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எச்சரிக்கை



ஜனநாயகத்தைப் பாதுகாக்கத் தவறினால், இதன்மூலம்நம்பிக்கை இழக்கும் இளைஞர்கள் வன்முறைக்கும் அடிப்படைவாதத்துக்கும் செல்வார்கள். அதற்கு நாங்கள் இடமளிக்கக்கூடாது. அதனால் ஜனநாயக நிறுவனங்களில் சேவையாற்றுபவர்கள், பொறுப்புடனும் நீதியாகவும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவித்த அவர் -

நாடாளுமன்றத்தில்நாடாளுமன்றத் தேர்தல் சட்டம், மாகாணசபை தேர்தல் சட்டம் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டம் இந்த மூன்று சட்டங்களிலும் திருத்தம் மேற்கொண்டு வந்து, இளைஞர்களுக்கு நூற்றுக்கு 25 வீத கட்டாய பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்ற பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தோம். அந்தப் பிரேரணைகளில் மூன்றில் இரண்டு இன்று அனுமதிக்கப்பட்டது. ஒன்று நாடாளுமன்ற இளைஞர் பிரதிநிதித்துவம் மற்றது உள்ளூராட்சி தொடர்பான இளைஞர் பிரதிநிதித்துவம்.

தற்போது இது அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அரசமைப்பு சபைக்கு இந்த பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படும். தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்ற பின்னர் சட்டமாகும் என எதிர்பார்க்கிறோம்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமைத்துவத்தின் ஆசிர்வாதத்துடன் கட்சியின் செயற்குழுவில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரமே நான் இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்தேன். என்றாலும்நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் தனிநபர் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரும் போது பாரியதொரு சிரமத்தை எடுக்கவேண்டி ஏற்படுகிறது.

சட்ட ஆலோசனைகள் அனைத்தையும் பெற்றுக்கொண்டு பிரேரணையை சமர்ப்பித்த பின்னர் குறித்த அமைச்சு எனது 3 பிரேரணைகளுக்கும் பரிந்துரை அனுப்பும் நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை.

ஆனால் 6 மாத காலத்துக்குள் குறித்த அமைச்சு அந்த பரிந்துரைகளை வழங்காவிட்டால் பிரேரணையை சமர்ப்பித்த உறுப்பினர் தான் விரும்பும் திகதிக்கு அந்த பிரேரணையை நாடாளுமன்றத்தில் கலந்துரையாட முடியும் என நாடாளுமன்ற நிலையியற் கட்டளையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதன் பிரகாரம் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதிநித்துவம் தொடர்பாக நான் கொண்டு வந்த 3 பிரேரணைகளுக்கும் குறித்த அமைச்சு பரிந்துரை வழங்கியிருக்கவில்லை.

அதனால் இந்த பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்துள்ளன. அதனால் நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் இந்தப் பிரேரணைகள் மூன்றையும் நாடாளுமன்றத்தில் கலந்துரையாட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தேன்.

ஆனால் எனது கோரிக்கைக்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை. எ ன்றாலும் இந்த கடிதம் நாடாளுமன்ற சட்டவரைவு திணைக்களம் ஊடாகவே அனுப்பப்பட்டது.

என்றாலும் அதற்கு பதில் கிடைக்கவில்லை. இது தொடர்பாக நான் பல தடவைகள் நினைவு படுத்தி சபாநாயகர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோருக்கு எழுதினேன். அதேநேரம் சபாநாயகரை சந்தித்து இது தொடர்பாகத் தெரிவித்தேன். செயலாளரை சந்தித்து பேசினேன். எதற்கும் பதில் கிடைக்கவில்லை. அதன் பிரகாரம் சட்டவரைவு திணைக்களத்துக்கு கடிதம் எழுதினேன்.அதற்கும் பதில் இல்லை.

இறுதியாகஎனதுபிரேரணைக்கு பல மாதங்களுக்கு பின்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாத்திரம் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் யோசனை ஒன்றை கொண்டுவந்திருக்கிறார்.

அது ஒரு நோக்கத்துக்காகவே கொண்டு வரப்பட்டிருக்கிறது. பொதுவாக நாடாளுமன்றத்தில் ஏதாவது ஒரு விடயத்துக்காக யாராவது ஒருவர் ஒரே மாதிரி பிரேரணை ஒன்று கொண்டு வந்தால் அதனை ஏற்றுக்கொள்வது நெறிமுறைகளுக்கமைய பிரச்சினையாகும். உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டத்தைமாத்திரமாவது முன்னுக்கு கொண்டு செல்லும் முயற்சி அரசாங்கத்துக்கு இருந்தது.

என்றாலும் தற்போது எனது நாடாளுமன்ற தேர்தல் சட்டம் மற்றும் மாகாணசபை தேர்தல் சட்ட திருத்தம் தொடர்பாக எனது பிரேரணை பெரும்பாலும் அனுமதிக்கப்பட்டே இருக்கிறது.

இருந்தபோதும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்த சட்டம் தொடர்பாக அரசாங்கம் எனது பிரேரணையை முந்திக்கொண்டு பல மாதங்களுக்கு பின்னர் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரேரணயை மாத்திரம் சமர்ப்பித்திருந்தது.

அரசாங்கம் இந்த பிரேரணையை விரைவாக கெண்டு வருவது உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடுவதற்கு என சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் விளக்கம் அளித்திருந்தனர்.

ஆனால் நான் அது தொடர்பில் விளக்கமளிக்க செல்லவில்லை. என்றாலும் இது நம்பகத்தன்மையை இல்லாமலாக்கும் செயல் என்பதால்நான் நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை எழுப்பினேன்.

இதன்போது நாடாளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமை சட்டத்தில் (ஆ) உப பிரிவில் 1,2,3,4 சரத்துக்கள் மீறப்பட்டிருப்பதாக சபாநாயகருக்குத் தெரிவித்தேன்.

ஏனென்றால் இந்த சட்டமூலங்கள் இரண்டுக்குமான பரிந்துரைகளை வெள;வேறாக அனுப்புமாறு நாடாளுமன்ற அரசமைப்பு சபை சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு இரண்டு தடவைகள் எழுதியிருந்தது. அந்த கோரிக்கைகளுக்கு அமைச்சு பதில் வழங்கவில்லை.

நாடாளுமன்ற செயற்குழுக்கள் செயற்படுவது சபாநாயகரின் உத்தரவுக்கமையவாகும். அப்படியானால் நாடாளுமன்ற குழுவொன்றின் உத்தரவொன்றை யாராவது மீறுவதாக இருந்தால் அது நாடாளுமன்றத்துக்கு செய்யும் அகௌரவமாகும்.

நாடாளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமை சட்டத்தை மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதை நான் நாடாளுமன்றத்தில் எழுப்பினேள்.அதன் பின்னர் சபாநாயகர் இந்த விடயத்தை சிறப்புரிமை குழுவுக்கு ஆற்றுப்படுத்தினார்.

சிறப்புரிமை குழுவின் தலைவர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கடந்தவாரம்இதுதொடர்பானகூட்டம் இடம்பெற்றது. அந்த கூட்டத்தில் ஆளும் எதிர்க்கட்சியை சேர்ந்த பல கட்சிகளின் உறுப்பினர்கள் பலரும் இருந்தனர். இதன்போது இந்த விடயத்தில் தவறு ஏற்பட்டுள்ளதென அனைவரும் ஏகமனதாகத் தீர்மானித் தனர். முதலாவது வந்த பிரேரணையைபிற்படுத்தி இரண்டாவதாக வந்த பிரேரணையை முன்கூட்டி எடுப்பது ஒழுக்க நெறி முறைகளுக்கும் முரணானது என சமல் ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டார்.

அத்துடன் இதனை சரி செய்யும் வரை இரண்டாவது வந்த இந்த பிரேரணை நாடாளுமன்றக் கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்வதை நிறுத்துமாறு சபாநாயகருக்கு எழுதுவதாக சமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

அத்துடன் கட்சி தலைவர்கள் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.அதில் செயலாளர் நாயகத்துக்கு பதிலாக பிரதி செயலாளர் அதில் கலந்து கொண்டிருந்தார்.

இதில் அநுரகுமார திஸாநாயக்க, கஜேந்திர குமார் பொன்னம்பலம், லக்ஷ்மன் கிரியெல்ல என அனைத்து கட்சிகளின் தலைவர்களும் இதில் தவறு இடம்பெற்றுள்ளது. அதனால் அதனை சரி செய்யும் வரை இடை நிறுத்துமாறு தீர்மானித்தனர்.

அத்துடன் அடுத்த நாடாளுமன்ற நடவடிக்கைகள் குழுவில் இது தொடர்பாகக் கலந்துரையாடி தீர்மானிக்கும் வரை இந்த பிரேரணையை நாடாளுமன்றத்தில் எடுத்துக்கொள்ள வேண்டாம் என அந்த குழுவில் கேட்டுக்கொண்டதாக எரான் விக்ரமரத்ன நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்தார்.

இந்த அனைத்து கோரிக்கைகளையும் மீறி பின்னர் வந்த பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அனுமதித்துக் கொண்டனர். இதுமிகவும்கவலைக்குரியவிடயமாகும். பாராளுமன்றத்துக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இணைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்ற இந்தப் பிரேரணையை நான் கொண்டுவந்தது, நாட்டில் இருக்கும் சனத்தொகையில் அரைவாசிப்பேர் இளைஞர்களாவர்.

நாடாளுமன்றத்தில் 35 வயதுக்கு குறைந்தவர்கள் 5 வீதம் கூட இல்லை. இளைஞர்களின் நம்பகத்தன்மை இல்லாமல் போயுள்ளது. தற்போது இடம் பெறுகின்ற முறைமை மற்றும் ஆட்சியானர்கள் தொடர்பில் இளைஞர்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போயிருக்கிறது. இந்த நம்பிக்கையில்லா தன்மையை மேலும் உறுதிப்படுத்தும் விடயங்களை செய்யக்கூடாது.

1642 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசியல் அதிகாரம் தொடர்பாக பிரித்தானிய நாடாளுமன்றத்தில் அரசர்களுக்கும் நாடாளுமன்றத்துக்கும் மோதல் ஒன்று இடம பெற்ற சந்தர்ப்பத்தில் அப்போது இருந்த சபாநாயகர் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்தை நான் சபாநாயகருக்குஎடுத்துக்கூறினேன்.

அதாவது அரசர் நாடாளுமன்றத்தில் இருக்கும் 5 பேரை கைது செய்ய ஆள்களை அனுப்பி இருந்தார்.அப்போது பிரித்தானிய நாடாளுமன்ற சபாநாயகராக வில்லியம் லெம்தோல், வந்தவர்களுக்கு தலைசாய்த்து, எனக்கு உங்களை காண்பதற்கு கண்களும் இல்லை பேசுவதற்கு நாவும் இல்லை.உறுப்பினர்கள் சபையின் சேவகரான நான், அவர்கள் சொல்வது போல் செயற்படுவேன்.

இந்த சபாநாயகரின் பரம்பரையில் வந்த நீங்கள் கட்சி பேதமின்றி உறுப்பினர்களின் உரிமைகளை பாதுகாப்பது உங்களது பொறுப்பு என்பதையும் இந்த சபையை நீதியாகவும் நேரமையாகவும் நடத்துவதும் உங்களது பொறுப்பு என்பதையும் நான் சபாநாயகருக்கு நினைவு படுத்தினேள்.

இருந்தபோதும் இளைஞர்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் எனது பிரேரணையை தள்ளிவிட்டு பிறகு வந்த பிரேரணையை நாடாளுமன்றத்தில் அனுமதித்த நடவடிக்கை தொடர்பில் கவலையடைகிறேன். இருந்தபோதும் எதிர்கால இளைஞர்கள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி சிந்தித்து நாடாளுமன்றம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க எடுத்த பிரேரணை என்னால் சமர்ப்பிக்க முடியுமாகியமையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இது தொடர்பில் நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே எமது நிறுவனங்களில் ஜனநாயகத்தை பாதுகாக்க தவறினால். இதன்மூலம்நம்பிக்கை இழக்கும் இளைஞர்கள் வன்முறைக்கும் அடிப்படைவாதத்துக்கும் செல்வார்கள். அதற்கு நாங்கள் இடமளிக்கக்கூடாது. அதனால் ஜனநாயகநிறுவனங்களில்சேவையாற்றுபவர்கள், பொறுப்புடனும் நீதியாகவும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டும்எனத்தெரிவித்தார். (05)

## நிலாவெளியில் போதைப்பொருளுடன் உப பொலிஸ் பரிசோதகர் கைது

போதைப்பொருளை வைத்திருந்ததாக கூறப்படும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் போதைப்பொருள்தடுப்புப்பிரிவின் அதிகாரிகள் குழுவொன்றால் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். திருகோணமலை நிலாவெளி பொலிஸ் குற்றப் புலனாய்வுப்பிரிவின்உபபொலிஸ் பரிசோதகரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து 25 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட உப பொலிஸ் பரிசோதகரிடம்மேலதிகவிசாரணைகளை போதைப்பொருள்தடுப்புப்பிரிவின் அதிகாரிகள்மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## தலங்கம தீ விபத்தில் வெளிநாட்டவர் சாவு

தலங்கம பகுதியில் அமைந்துள்ள ஜெயந்தி புர இரண்டு மாடிக் கட்டடத்தின் குளியலறையில் ஏற்பட்ட தீவிபத்தில்வெளிநாட்டுபிரஜைஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தலங்கம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளிரூட்டியில் ஏற்பட்ட தீ பரவலால் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது. கோட்டை மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் தீயைகட்டுப்படுத்தும்நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர் எனத்தலங்கம பொலிஸார் தெரிவித்தனர். (05)

## கந்தப்பளையில் ஓட்டோ திருடிய இளைஞன் கைது

*நுவரெலியா- கந்தப்பளை நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவை திருடிச் சென்ற தலவாக்கலை பிரதேசத்தை சேர்ந்த 18 வயது இளைஞன் ஒருவரை கந்தப்பளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த கைது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -*

*கந்தப்பளை தேயிலைமலை தோட்டத்தை சேர்ந்த நபர் ஒருவர் தனக்கு சொந்தமான ஓட்டோவை கந்தப்பளை நகரில் நிறுத்தி விட்டு வீட்டுக்கு பொருள்கள் வாங்க கடைக்கு சென்றுள்ளார்.*

*இந்தசந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி தலவாக்கலை கட்டுக்கலை பகுதியை சேர்ந்த 18 வயது இளைஞர் ஓட்டோவைத் திருடி சென்றுள்ளார்.*

*கடையில் இருந்து வெளியே வந்து பார்க்கும் பொழுது, தான் நிறுத்திவிட்டு சென்ற ஓட்டோவைக் காணவில்லையென பதற்றத்திக்குள்ளான ஓட்டோ உரிமையாளர் அயலவர்களிடம் விசாரித்துள்ளார்.*

*இதன்போது ஓட்டோவை ஒருவர் மிக வேகமாக நுவரெலியா பகுதியை நோக்கி சற்றுமுன் செலுத்தி சென்றதை அவதானித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.*

*அதன்பின் கந்தப்பளை பொலிஸாரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து விரைவாக செயற்பட்ட பொலிஸார் திருடிச் செல்லப்பட்ட ஓட்ஹி;டாவை நுவரெலியா - கந்தப்பளை பொரலந்தை நகரில் மடக்கி பிடித்ததுடன் ஓட்டோவைத் திருடி சென்ற இளைஞரையும் கைதுசெய்ததாகசம்பவம்தொடர்பான விசாரணையை மேற்கொண்டு வரும் கந்தப்பளைபொலிஸார்தெரிவித்தனர்.*

*மேலும் இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இளைஞரைவிசாரணையின் பின்னர் நுவரெலியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக கந்தப்பளை பொலிஸார் தெரிவித்தனர். (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வரவு செலவுத் திட்டம் தேவையும் யதார்த்தமும்

வரவுசெலவுத்திட்டம் இன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. மக்களின் பெரும் எதிர்பார்ப்புகளுக்குமத்தியில், தமது வாழ்க்கையை தொடர்ந்து இழுத்துச் செல்வதற்கு ஆட்சியாளர்களிடம் இருந்து ஏதாவது உதவி கிடைத்துவிடும் என்கிற அவர்களின் எதிர்பார்ப்பகளுக்கு மத்தியில் முன்வைக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டம் இது.

பக்கக் கதவால் ரணில் விக்கிரமசிங்க அரசுத் தலைவர் இருக்கையைப் பிடித்துக்கொண்ட பின்னர், அவர் முன்வைக்கும் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் இது. பொருளாதார மீட்சி, பொருளாதார வளர்ச்சி இவை இரண்டையும் முன்வைக்கும் அதேநேரம் மக்களின் பிரச்சினைகளுக்கானதீர்வுகளையும் முன்வைக்க வேண்டிய தேவை உள்ளது.

பன்னாட்டு நாணய நிதியமான ஐஎம்எவ் நிபந்தனையின்படி அரசின் வருமானத்தை அதிகரிக்க வேண்டியிருக்கிறது. அப்போதுதான் அதன் அடுத்தடுத்தகட்ட நிதியை அரசால் பெறமுடியும். அந்த நிதி இல்லாமல் பொருளாதார மீட்சி கிடையாது. எனவே வரிகளின் அதிகரிப்பு இந்த வரவு செலவுத் திட்டத்தில் கட்டாயம் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். அரச வருமான அதிகரிப்புக்கான தேவை நியாயமானதாகப் பட்டாலும் பொதுமக்கள் மீது சுமையை மீண்டும் மீண்டும் ஏற்றும் வகையிலான வரி அதிகரிப்புக்கள் ஏற்புடையதல்ல.

பணக்காரர்களிடமிருந்து வரியைப்பெறுவதற்குப் பதில் சாதாரண மக்களின் வயிற்றிலடித்துப் பணத்தைப் புடுங்கும் விதத்திலேயே இந்த ஆட்சி நடந்துகொள்கின்றது. இன்றைய வரவு செலவுத் திட்டத்திலும் அதுவேதான் தொடரும் என்று தெரிகின்றது. பொதுமக்களை நெருக்குவாரத்திற்குள் தள்ளும் வரிகள் மேலும் அதிகரிக்கப்படவுள்ளன. மக்கள் மீதான வரி அதிகரிப்பு ஒன்றே அரசின் வருமானத்தைப் பெருக்கும் வழி என்கிற வகையில் செயற்படும் ஆட்சியாளர்களின் போக்கு நிச்சயம் மக்களிடம் எதிர்ப்புக்களையும் கிளர்ச்சிகளையும் உருவாக்கும் என்பதைத் தெரிந்துகொண்டுதான், பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீட்டை கடந்த வருடத்திலும் பார்க்க அதிகரித்து தன்னைப் பாதுகாக்க ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பாதுகாப்புத் தரப்பினரை திருப்தியாகவும் கோபப்படுத்தாமலும் வைத்திருப்பதன் மூலமே அவர்கள் கோட்டாபயவைக் கைவிட்டது போன்று தன்னையும் கைவிடாதிருப்பார்கள் என்று ரணில் நம்புகிறார். அதற்காகவே பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீட்டை, அத்தியாவசிய தேவையான சுகாதாரத்திலும் பார்க்க அதிகரித்திருக்கிறார். அவரது அதிகார இருப்பு படையினர் கைகளிலேயே தங்கியிருப்பதால் கூச்சமின்றி அவர் இந்தக் காரியத்தைச் செய்துள்ளார்.

எப்படியிருந்தாலும் இந்த வரவு செலவுத் திட்டம் மக்கள் எதிர்பார்க்கும் நிவாரணங்களை வழங்க மறுத்தால் அரச படைகளின் எதிர்ப்பையும் மீறி மக்கள் கிளர்ச்சி வெடிக்கும். இழப்புக்கள் பற்றிக் கவலைப்படாமல் அந்தக் கிளர்ச்சி படையினரைவிட மோசமான நடந்துகொள்ளும்.

## தனித்து நின்று அரபு படைகளை முறியடித்த இஸ்ரேலை 1973 யோம் கிப்பூர் போர்!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**




1967ஆம் ஆண்டின் ஆறு நாள் அரபு- இஸ்ரேல் போரில் இஸ்ரேல் தீர்க்கமான வெற்றியை பெற்றது. அதன் பிறகு, சிரியாவிலிருந்து கோலன் ஹைட்ஸ், எகிப்திலிருந்து சினாய் தீபகற்ப பிரதேசங்களையும் இஸ்ரேல் கைப்பற்றியது.

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, எகிப்து- சிரியா இணைந்து இரு நாடுகளும் இஸ்ரேல் மீது ஒருங்கிணைந்த தாக்குதலைத் தொடங்கின. 1973 யோம் கிப்பூர் போருக்குப் (Yom Kippur War) பிறகு இஸ்ரேல் மீதான கடந்த ஒக்டோபர் மாத ஹமாஸின் அதிரடித் தாக்குதலும் ஐம்பது வருடங்கள் கழிந்து பண்டிகை காலத்திலேயே நடந்துள்ளது.


இது நான்காவது அரபு- இஸ்ரேல் போர் என்றும் அழைக்கப்படுகிறது. 1949, 1956 மற்றும் 1967 ஆகிய மூன்று போர்களுக்குப் பிறகு நடந்த முக்கியமான போர்.



(இஸ்ரேல் மீது ஒருங்கிணைந்த தாக்குதலை எகிப்து- சிரியா இணைந்து நடத்திய 1973 யோம் கிப்பூர் போர் (Yom Kippur War) பண்டிகைக் காலத்திலேயே இம்முறையும் அக்டோபர் 7இல் ஹமாஸ் ஏவுகணைகளை வீசி தாக்கியது)

### யோம் கிப்பூர் 6 ஒக்டோபர் 1973

அன்வர் சதாத் போட்ட திட்டத்தின்படி, யோம் கிப்பூர் அனுசரிப்புத் தினமான 6 அக்டோபர் 1973 அன்று எகிப்து, சிரியப் படைகள் முறையே சினாய் மற்றும் மேற்குக் கரைப்பகுதிகளை தாக்கின. இத்தாக்குதலுக்கு முன்பே இஸ்ரேலுக்கு இராணுவ உளவுப்படையின் தகவல் போய்ச் சேர்ந்திருந்தது.




திடீரென்று நிகழ்ந்த தாக்குதலை முதலில் எதிர்கொள்வது இஸ்ரேலுக்குக் கடினமாக இருந்தது. ஏராளமான உயிரிழப்புகள் நிகழ்ந்தன. நோன்பு அனுசரிப்புக்குச் சென்றிருந்த இஸ்ரேலிய படை அணியினர் உடனே திரும்ப அழைக்கப்பட்டனர். இம்முறையும் இஸ்ரேல் தான் இழந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்றிக்கொண்டது. அதுமட்டுமின்றி இஸ்ரேலின் இராணுவ வலிமை மீண்டும் நிரூபிக்கப்பட்டது.

இப்போரின்போது அரபுப் படைகளில் 18,500 போர் கொல்லப்பட்டனர். 35,000 பேர் காயமடைந்தனர்.

8,783 பேர் போர் கைதிகளாக இஸ்ரேலால் பிடிக்கப்பட்டனர். அத்துடன் 2,300 கவச தாங்கிகள் அழிக்கப்பட்டன. அரபு படைகளின் 514 வானூர்திகளும் அழிக்கப்பட்டு, 19 கடற் கலங்களும் மூழ்கடிக்கப்பட்டன.

இஸ்ரேலிய தரப்பில் 2,800 படையினர் உயிரிழந்தனர், 8,800 பேர் காயமடைந்தனர். அத்துடன் 293 இஸ்ரேலிய படையினர் போர்க் கைதிகளாகப் பிடிபட்டனர். 400 கவச தாங்கிகள் அழிக்கப்பட்டன.

102 வானூர்திகளும் அழிக்கப்பட்டன.

### யோம் கிப்பூர் யூதரகளின் பண்டிகை

யோம் கிப்பூர் என்பது யூதர்களின் முக்கிய பண்டிகையாகும். நீண்ட விரதங்களைப் பல நாட்களுக்கு அனுசரித்து பண்டிகை நாளில் காலை முதல் மாலை வரை வழிபாட்டிலும், தியானித்தலிலும் செலவிடுவர்.

அப்படியொருநாளில் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவது என்பது எகிப்து அன்வர் சதாத்தின் திட்டம். சதாத், நாசருக்குப் பிறகு அதிபர் ஆனவர். எகிப்து அரசரைப் பதவியை விட்டு நீக்கும் புரட்சியில் பங்கேற்றவர். பின்னர் இஸ்ரேலுடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்ட முதல் அராபியத் தலைவரானால். இதன் காரணமாகவே சுட்டுக் கொல்லப்பட்டார்.

எகிப்து அன்வர் சதாத்தின் இப் போர் திட்டத்துக்குத் தனது சக அரபு நாடுகளையும் இணைத்துக்கொண்டார். முன் எப்போதும் இல்லாத வகையில் சவூதி அரேபியா உட்படப் பல நாடுகள் சதாத்தின் முயற்சிக்கு ஆதரவளித்தன.

### வல்லரசுகளின் ஆதரவு

அரபு நாடுகளுடனான செல்வாக்கைப் பெருக்கும் பொருட்டு சோவியத் ஒன்றியம் எகிப்துக்கும், சிரியாவுக்கும் இராணுவ உதவிகளைச் செய்தது. உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. இஸ்ரேல் அமெரிக்க சார்பாக இருந்ததால் சோவியத் ஆதரவை அரபு நாடுகள் நாடத்துவங்கின.

மோடே தயான் முன்னாள் இராணுவ தளபதி பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் இஸ்ரேல் 1967இல் நடந்த போரில் கைப்பற்றிய பகுதிகளைத் தொடர்ந்து தக்க வைத்திருக்கும் என்றும் மேற்கு கரையில் வசிக்கும் பாலஸ்தீனியர்கள் விரும்பினால் வேறு இடங்களுக்கு இடம் பெயரலாம் என்றும் சொன்னார். இதே மோடே தயான் இஸ்ரேலுக்காகப் பல போர்க்களங்களைக் கண்டவர். பின்னாளில் பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் இருந்தார்.

இது ஏற்கனவே எரிச்சலில் இருந்த அராபிய நாடுகளை மேலும் கோபம் கொள்ளச் செய்தது. அன்வர் சதாத் இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டார். ஏற்கனவே இருந்த ஆதரவுடன் லிபியாவின் கடாஃபியும் சதாத்துக்கு ஆதரவளித்தார்.

லிபியா ஃபிரான்ஸிடமிருந்து நவீன போர் விமானங்களை வாங்கியிருந்தது. நேரடியாகப் போர்க்களத்துக்கு வராவிட்டாலும் லிபியா தளவாடங்களை அளித்தது.

அமெரிக்கா இந்த நேரத்தில் பேண்டம் விமானங்களை இஸ்ரேலுக்கு அளித்தது. வலுவான இஸ்ரேல் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் என்று நம்பினார் அமெரிக்க அதிபர் நிக்சன்.

இஸ்ரேலின் விடுதலை பிரகடனக் கூட்டத்தில் பங்கேற்ற இரு பெண்மணிகளில் ஒருவரான கோல்டா மேயர் உலகின் இரண்டாம் பெண் பிரதமர். யோம் கிப்பூர் போரின்

(5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir


# ஒருகோடி ரூபாவை லஞ்சமாகபெற்ற கைதான மூவருக்கு விளக்கமறியல்

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைதான மத்திய சுற்றாடல் அதிகார சபையின்தலைவர்சுபுன்எஸ்.பத்திரகே உள்ளிட்ட மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொழிலதிபர் ஒருவரிடமிருந்து 10 மில்லியன் ரூபா லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் மத்திய சுற்றாடல் அதி கார சபையின் தலைவர் உள்ளிட்ட மூவர்வெள்ளிக்கிழமைஇலஞ்சஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து குறித்த மூவ ரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி யபோது அவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் சனிக்கிழமை உத்தரவிட் டுள்ளது. (05)

# பிறந்தநாள் நிகழ்வின்போது மது அருந்தியவர் இறப்பு இரு பெண்கள் உள்ளிட்ட மூவர் வைத்தியசாலையில்



கோட்டை - எத்துல்கோட்டை பிரதேசத்தில் நான்கு மாடிக் கட்டடத்தில் இடம்பெற்ற பிறந்தநாள் நிகழ்வொன்றில் மது அருந் திக்கொண்டிருந்த நபரொருவர் உயிரிழந்துள்ளார் என வெலிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் ரன்ன வடிகல பிரதேசத்தை சேர்ந்த 38 வயதுடைய நபர் ஆவார்.

இதேவேளை, பிறந்தநாள் நிகழ் வில் கலந்துகொண்ட இரண்டு பெண்கள் உட்பட மூவர் வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிறந்தநாள் நிகழ்வில் கலந்து கொண்ட ஏனையவர்கள் தொடர்பில் எவ்வித தகவல்களும் கிடைக்க வில்லை எனவும் அவர்கள் அதிக விலை கொண்ட ஏழு மதுபான போத்தல்களைஅருந்தியிருக்கின்றனர் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரிய-வந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் வெலிக்கடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# இஸ்ரேலின் 1973 யோம்...
















(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இழப்புகளுக்குப்பொறுப்பேற்றுப்பதவிவிலகினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்போரின்போது புனித ரமழான் மாத நோன்பும் அனுசரிக்கப்பட்டு வந்தது. அன்வர் சதாத் இதையும் கருத்தில் கொண்டிருந்தாலும், எதிர்பாராத தாக்குதல் அதுவும் அனைத்து நவீன இராணுவத் தளவாடங்களுடன் நிகழ்ந்த தாக்குதலால் இஸ்ரேல் முழுமையாக வீழும் என நினைத்தார். ஆனால் அது நிகழாதது ம ட்டுமல்ல, இஸ்ரேலை விரட்ட முடியவில்லை எனும் கோபத்தை நிரந்தரமாக அராபியர்கள் மத்தியில் நிலைக்க வைத்தார் என்ற குற்றச்சாட்டும் எழுந்தது.

### அராபத் - ஒஸ்லோ அமைதி உடன்படிக்கை

இந்தப் போரின் முடிவில் அதிருப்தி அடைந்த அராஃபாத்தின் விடுதலை இயக்கம் இனி அராபிய ஆட்சியாளர்களை நம்பிப் பயனில்லை என்று முடிவெடுத்து கொரில்லா தாக்குதலை அதிகரித்தது.

இந்த போரின் விளைவால் எகிப்து அதிபர் அன்வர் சதாத் இஸ்ரேலுடன் 1979இல் அமைதி உடன்படிக்கை செய்துகொண்டார். இதன் மூலம் இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டிலிருந்த சினாய் பிரதேசத்தை எகிப்திடம் மீண்டும் அளித்தது.

பின்னர்1993, செப்டம்பரில்பாலஸ்தீனவிடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராஃபத்தும்அன்றைய இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ரபினும் ஒஸ்லோ நகரில் அமைதி உடன்படிக்கை கையெழுத்திட்டனர்.

யாசர் அராஃபத்தும் இஸ்ரேலை அங்கீகரிப்பதாகவும், தனது இயக்கம் வன்மு-றைப்பாதையைக் கைவிடுவதாகவும் இந்த ஒஸ்லோ உடன்படிக்கை கையெழுத்திட்டனர். அத்துடன் பாலஸ்தீன விடுதலை இயக்கம் பொதுவாக பாலஸ்தீன மக்களின் குரலைப் அதிகாரப்பூர்வம ாக வெளிப்படுத்தும் அமைப்பாக ஐ.நாவினால் அங்கீகரிக்கப்பட்டது.

பாலஸ்தீன உடன்படிக்கைக்குப் பிறகு இஸ்ரேல் பிரதமர் யிட்சாக் ரபீன் சுட்டுக்கொல்லப்பட்டார். பாலஸ்தீனர்களுக்கு சலுகைக் காட்டுவதாக யூத வெறியர் ஒருவர் கருதியதால் அவர் கொல்லப்பட்டார். அதற்கு முன்னர் அராஃபத்துக்கும் ரபீனுக்கும் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டதும் அறிந்ததே.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City


கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியாவில் உடைப்பெடுத்த குளம் 15 ஏக்கர் வயல் நிலங்கள் பாதிப்பு!

வவுனியா ஆசிகுளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கோமரசங்குளம் பகுதியிலுள்ள குளமொன்று உடைப்பெடுத்தமையால் அதன் கீழுள்ள 15 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கி பாதிப்படைந்துள்ளமையுடன் குளத்தின் நீர் தொடர்ந்தும் வெளியேறிய வண்ணமுள்ளது.

மாவட்டத்தின் கடந்த சில நாள்களாக தொடரும் மழையுடனான காலநிலையால் பல குளங்களின் நீர்மட்டம் உயர்வடைந்து காணப்பட்ட நிலையிலேயே இவ் குளம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை உடைப்பெடுத்துள்ளது.

ஊர் மக்கள் பல மணிநேரமாக குளத்தின் உடைபெடுத்த பகுதியை மண்நிரப்பி கட்டுப்படுத்த முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அவை பயனளிக்கவில்லை.

கோமரசங்குளம் பகுதியிலுள்ள இவ்குளம் நீண்டகாலமாக எவ்வித புனரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் குளத்தின் கீழ் 35 ஏக்கர் வயல் நிலங்கள் காணப்படுகின்ற போதிலும் தற்போது 15 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இந்த அனர்த்தம் தொடர்பில் உரிய தரப்பினர்களுக்கு தகவல் வழங்கியமையுடன் இவ் குளத்திலிருந்து வெளியேறும் நீரினை கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.(05)

# மோட்டார் சைக்கிள் மோதியதில் பெண் சாவு; சிலாபத்தில் சம்பவம்

புத்தளம் -சிலாபம் பிரதேசத்தில் அம்மன் கோயில் வீதியில் மோட்டார் சைக்கிள் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என சிலாபம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் சுமார் 75 வயதுடைய 04 அடி உயரம் 06 அங்குலம் கொண்ட நீல நிற உடையணிந்த பெண் ஆவார்.

குறித்த விபத்தானது குருநாகல் பிரதேசத்தில் இருந்து சிலாபம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் பயணித்த பெண் மீது மோதியதில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் மற்றும் பெண் ஆகியோர் சிலாபம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் குறித்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் தொடர்பில் எந்தத்தகவலும் கிடைக்காத நிலையில் அவரது சடலம் சிலாபம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் சிலாபம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு திங்கள் கூடுகின்றது

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு இன்று (திங்கட்கிழமை) கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் சபை அமர்வுகளில் தொடர்ச்சியாக நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் நிலுவையில் உள்ள வழக்கு விசாரணைகள் தொடர்பில் சிறப்புரிமைகளை பயன்படுத்தி கருத்துக்களை வெளிப்படுத்துவது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

மேலும் இந்த விடயம் சம்பந்தமாக நிறைவேற்றுக்குழுவில் தொடர்ச்சியாக கலந்துரைய-ாடப்படவுள்ளதோடு, உறுப்பினர்கள் சிறப்புரிமைகளை பயன்படுத்தும் அதேநேரம், நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாப்பு தொடர்பிலும் எவ்விமாக விடயங்களை கையாள முடியும் என்பது தொடபிலான ஒரு மூலோபாயத்தைக் கண்டறிவது குறித்தும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

(05)

# வெள்ளத்தில் மூழ்கி இரு யானைகள் சாவு

கிரிந்தி ஓயாவில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக இரண்டு யானைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளன.

குடாஓயா, துலுல்ல பிரதேசத்தில் உள்ளகிராமமக்களால் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட நிலையில், உயிரிழந்த இரு யானைகளும் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

குறித்த யானைகளில் ஒன்று ஆறடி உயரமும் சுமார் 30 வயதுடையது எனவும் மற்றைய யானை ஆறடி உயரமும் சுமார் 25 வயதுடையது எனவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர் .

இது தொடர்பிலான மேலதிக விசாரைணகளை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் லஞ்ச குற்றச்சாட்டால் பணியிலிருந்து நிறுத்தம்

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் எஸ். பத்திரகேவின் சேவை உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இலஞ்ச விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் எஸ். பத்திரகே மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அனுருத்த பொல்கம்பால உள்ளிட்ட மூவர் இம்மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவரை பணியிலிருந்து இடைநிறுத்த அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

கப்பலிலிருந்து அகற்றப்பட்ட கச்சா எண்ணெய் சுத்திகரிப்புக்காக சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதியைப் பெறுவதற்கு இலஞ்சம் கோரப்பட்டமை தொடர்பில் பிரபல தொழிலதிபர் ஒருவர் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் அண்மையில் முறைப்பாடு செய்திருந்தார்.

(05)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்











4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir

## நாட்டின்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்திரத்தன்மைநிதியத்தைநிறுவுதல் மற்றும்செயல்படாதகடன்களுக்கான சொத்துமுகாமைத்துவநிறுவனத்தை உருவாக்குதல் உள்ளிட்ட திட்டங்களை செயல்படுத்த மத்திய வங்கி, அரசாங்கம் மற்றும் சர்வதேச நாணயநிதியம்ஆகியவற்றின்கூட்டு நடவடிக்கைகள்தேவைப்படுகின்றன.

## ரணில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்த்துக்களை தெரிவித்ததோடு அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

கடற்றொழில்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் ஆர்.யோகராஜா மற்றும் விசேட விருந்தினர்கள், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உட்பட ஜனாதிபதி அலுவலக உயர் அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## நெருக்கடி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிப்புக்குள்ளாகும் நாடு என்றும் புதுடில்லியானது சிறந்த மைக்ரோ பொருளாதாரக் கொள்கையைக் கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், இந்தியாவுடன் ஒப்பிடும்போது பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகியவை மிகவும் பலவீனமான உட்கட்டமைப்பைக்கொண்டுள்ளன, வர்த்தகத்திற்காக அதிகமான செலவுகள்ஏற்படுகின்றன. அத்துடன் அந்நாடுகளின் விரிவுபடுத்தப்பட்ட சந்தைகளுக்கான அணுகல் குறைவாக உள்ளது. குறைவான வர்த்தக ஒப்பந்தங்களே மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளது.

## குளவிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளனர்.

இருவரும் ரிகில்லகஸ்கட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் 59 வயதுடைய மகன் அன்றையதினம்உயிரிழந்துள்ளார்.

சிகிச்சைபெற்று வந்த 85 வயது பெண்ணும் நேற்று உயிரிழந்தார்.

தமது வீட்டிற்கு அருகாமையில் நின்ற போது குளவி கொட்டுக்கு இலக்கான தாயை காப்பாற்ற முற்பட்ட போது மகனும் குளவி தாக்குதலுக்கு உள்ளாகினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் இருவரும் ஆபத்தான நிலையில் ரிக்கிலகஸ்கட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர்.

## மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் அனுபவித்துவிட்டார்கள். மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளது. சமையல் எரிவாயு விலை அதிகரித்துள்ளது. போக்குவரத்து கட்டணங்கள் அதிகரித்துள்ளது. இதற்கு மேலதிகமாக எதிர்வரும்ஜனவரிமாதம்முதல்வருமான வரியை 18 சதவீதமாக அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே வரவு, செலவத்திட்டத்தில் உரிய நிவாரணங்கள் வழங்கப்படவேண்டியது அரசின்கடமையாக உள்ளது.

ஆனால், அரசின் பாதுகாப்புச் செலவீனங்களுக்கான தொகை கடந்த காலத்தொகையான 410 பில்லியனிலிருந்து 423 பில்லியன்களாக அதிகரித்துள்ளது. ஆனால் கல்வித்துறைக்கு அவ்வாறான அதிகரிப்பைச் செய்யப்படவில்லை. சுகாதாரத் துறைக்கு அதிகரிப்பு செய்யவில்லை. மக்களுக்கான நலத் திட்டங்களுக்காக அவ்விதமான அதிகரிப்பைச்செய்யவில்லை. பாதுகாப்புக்கான செலவீனத்தை அதிகரிப்பதன்ஊடாகஅரசுதன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கே முயற்சிக்கின்றது என்பது தெளிவாகின்றது. அரச ஊழியர்கள் சம்பளம்என்றவகையில்20ஆயிரம் ரூபாவை அதிகரிக்க வேண்டும். அவ்வாறில்ஷ்லாது விட்டால் நாம் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்றார்.

அகில இலங்கை அரச பொது ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்ததாவது:

கடந்த வரவு, செலவுத்திட்டத்தில் எவ்விதமானநன்மைகளும்எமக்கு வழங்கப்படவில்லை. அவ்வாறான நிலையில்2024ஆம்ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டத்தில் எம்மை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டு எடுப்பதாக இருந்தால் எமக்கான நிவாரணங்களை வழங்க வேண்டும். அதனையே அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கின்றோம். அதற்காக ஆகக்குறைந்தது 20ஆயிரம்ரூபாசம்பளஅதிகரிப்பை செய்ய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அரசாங்கம் அதனைச் செய்வதற்கு மறுத்தால் அரச ஊழியர்கள் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்றார்.

இலங்கை உழைக்கும் மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் டானியல் நோயல் ஜெனாஸ்டன் தெரிவிக்கையில், எமது உழைக்கும் தோட்டப்பகுதி மக்களுக்கான நியாங்கள் இதுவரையில் வழங்கப்படவில்லை. அவர்களுக்கான உரிய ஊதியுமும், காணி உரிமையும் உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளது. ஆகவே நாளையதினம் (இன்று) முன்வைக்கப்படும்வரவு, செலவுத்திட்டம் அந்த விடயங்களை உள்வாங்கும் என்று நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம் என்றார்.

## திருமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவில் இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது.

கந்தளாய், மொரவெள, திருகோணமலை உள்ளிட்ட பிரதேசங்களில்நிலஅதிர்வுஉணரப்பட்டது. எனினும்எவ்விதமானசேதங்களும் ஏற்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## குறுகிய கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொற்பகாலத்தில் மக்களை கவருவதற்காக தான் வரவு, செலவுத் திட்ட அறிவிப்புக்களைச் செய்யப் போவதில்லை என்பதையும் அவர் உறுதியாக கூறினார்.

அந்தக் கூற்றுக்கு அமைவாகவே தற்போதைய வரவு, செலவுத்திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்தவரவு, செலவுத் திட்டமானது, குறுகியகால நெருக்கடிகளுக்கு தீர்வினை வழங்கும் அதேநேரம், நீண்டகால அடிப்படையில் நாட்டை பொருளாதாரத்திலிருந்து மீண்டு சுபீட்சமான நாடாக கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளையும் மையப்படுத்தியே முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ள என்றார்.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com

# 10 கிலோ கேரள கஞ்சாவுடன் ஆணும் பெண்ணும் கைது

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் சனிக்கிழமை திருகோணமலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட என்.சி வீதி, திருகடலூர் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 10 கிலோ 610 கிராம் கேரள கஞ்சாவுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய பெண் மற்றும் 43 வயதுடைய ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் கைப்பற்றபட்டு சந்தேக நபர்களுடன் திருகோணமலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (05)

# கண்டி - மாத்தறை ரயில் தொழில்நுட்ப கோளாறினால் இடைநடுவில் நின்றது!

கண்டியிலிருந்து மாத்தறை மற்றும் பெலியத்த நோக்கி பயணித்த 40 ஆம் இலக்க ரயில் அம்பேபுஸ்ஸ மற்றும் மீரிகமவுக்கிடையில் தொழில்நுட்பகோளாறுக்கு உள்ளாகியுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால், பயணிகள் வேறு போக்குவரத்தை வசதிகளை தேடியதாக தெரிவிக்கப்படுகிறது.

தொழில்நுட்பக் கோளாறினால் பாதிக்கப்பட்ட ரயில் மிகவிரைவில் திருத்தப்படும் என்றும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (05)

# மாரவில கடற்கரையில் மோதல்: துப்பாக்கிசூட்டில் ஒருவர் காயம்

மாரவில வடக்கு முதுகட்டுவ கடற்கரையில் மீன் வாங்கச் சென்ற போது ஏற்பட்ட தகராறில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார் என மாரவில தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திலிருந்து 12 போர் துப்பாக்கி மற்றும் இரண்டு வெற்றுத் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரி வித்தனர். (05)




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போது Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
138, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.11.2023இல் வெளியிடப்பெற்றது.